**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM**

**GOP.No.144/2023**

PW-3 சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**குறுக்குவிசாரணை**

மனுதாரர் எனது மகள். நான் தற்போது நாமக்கல், மோகனூர்ரோடு, லத்துவாடி புங்கமரத்தெருவில் வசித்து வருகிறேன். நான் மேற்படி விலாசத்தில் வசிக்கிறேன் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கடந்த 10 ஆண்டுகளாக எனது குடும்பத்தைவிட்டு பிரிந்து வேறு முகவரியில் வசித்து வருகின்ற காரணத்தினால் மனுதாரரை பற்றி எந்த சங்கதியும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

இந்த மனுவினை மனுதாரர் எதற்காக தாக்கல் செய்திருக்கிறார் என்றால் மனுதாரரின் கணவர் மனுதாரரை தொடர்ந்து கொடுமைபடுத்தி வந்தார். எனவே தன்னை கொடுமைபடுத்தக்கூடாது என்று மனுதாரர் இந்த மனுவினை தாக்கல் செய்திருக்கிறார். மேலும் மனுதாரரின் இரண்டு குழந்தைகளையும் நாங்கள் தான் வைத்து வளர்த்துவந்தோம். மனுதாரரின் மூத்தமகன் அருகிலிருந்த பள்ளியில் படித்துகொண்டிருந்தார். மனுதாரரின் கணவரின் பெற்றோர்கள் மாதத்திற்கு ஒருமுறை வந்து குழந்தைகளை பார்த்துவிட்டு போய்கொண்டிருந்தார்கள். திடீரென்று ஒரு நாள் இரண்டு குழந்தைகளையும் காரில் வைத்து கடத்தி சென்றுவிட்டார்கள். அதனால் தான் மனுதாரர் இந்த மனுவினை தாக்கல் செய்திருக்கிறார்.

இந்த மனுவினைபற்றி எந்த சங்கதியும் எனக்கு தெரியாது என்றாலும், மனுதாரர் கேட்டுகொண்டதற்கிணங்க பொய்சாட்சி சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. குழந்தைகளை கடத்தி செல்வதற்கு முன்பாக மூத்தமகன் படித்துகொண்டிருந்த பள்ளி நாமக்கல் டிரினிட்டி பள்ளியாகும். நான் தினசரி கூலிவேலைக்கு செல்கிறேன். எனது தினசரி கூலி ரூ.550/-

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.